**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்**

**அசல் வழக்கு எண். 222 /2020**

இந்நீதிமன்ற எழுத்தர் திரு J. மோகன் Grade –III Bench Clerk என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் 1 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2022ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **பெயர். முகமது உசேன் (PW1 )**<br><br>**வயது.** | **நாள் 18 /08/2022** |
| **த/பெ.** | **தொழில்** |
| **கிராமம்** | **வட்டம்,** |

**வா.சா.1 தரப்பில் கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு வா.சா.ஆ1 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை தொடாச்சி.**

மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் முதல் பிரதிவாதிக்கும், வாதிக்கும் இடையே ஏற்பட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.** 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அப்துல் பாஷா மற்றும் சிலர் ஷெரினா அவர்கள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவண சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.** 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் பிரதிவாதி 2வது பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவண எண். 148/2019 எண்ணாக பதிவு செய்யப்பட்ட பவர் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.** 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்து முதல் பிரதிவாதியின் சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஒப்பந்தம் செய்யப்பட்ட தேதி என்னவென்றால் சரியாக நினைவு இல்லை. அந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள தேதிதான். முதல் பிரதிவாதி எதற்காக தாவா சொத்துக்களை விற்க போவதாக சொன்னார் என்றால் குடும்பத்தேவைக்காக விற்கப்போவதாக சொன்னார்.

அவ்வாறு அவர் குடும்ப தேவைக்காக தாவா சொத்தை விற்பதாக சொன்னார் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. முதல் பிரதிவாதி தனது கணவர் மருத்துவ செலவிற்காக தாவா சொத்தை விற்கபோவதாக சொன்னார் என்றால் சரியல்ல. அந்த நேரத்தில் அவரது கணவர் நல்ல ஆரோக்கியமான நிலையில் தான் இருந்தார். பிரதிவாதி 1ன் கணவர் அப்போது கேன்சர் நோயில் அவதிப்பட்டு மருத்துவ சிகிட்சையில் இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றாலும் அதை தெரிந்து கொண்டு தான் 1மாத கால அவகாசம் கேட்டு அந்த ஒப்பந்தத்தை செய்தேன் என்றால் சரியல்ல. நான் ஏறிபடுத்திக்கொண்டு தான் ஒப்பந்தத்தில் 1 மாத காலம் ஒப்பந்தம் தான் என்று கூறி கையொப்பம் செய்தேன் என்றால் குறைந்தபட்சமாக 1 மாத காலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கிரைய ஒப்பந்தத்தின் படி கிரைய தொகையாக நிர்ணயித்த தொகை எவ்வளவு என்றால் ரூ. 70,000 ஒரு சென்டின் விலை ஆகும். அவர்கள் அனுபவத்தில் உள்ளது 27 செண்ட். அந்த 27 சென்டிற்கான தொகையாக மொத்தம் ரூ. 18, ,90,000 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நான் வழக்கு தாக்கல் செய்யும் போது தாக்கல் செய்த பிராதில் முதல் பிரதிவாதி ஒப்பந்தம் செய்த உடனே சுவாதினம் எனக்க கொடுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது தவறு என்று சொன்னால் ஒப்பந்தம் செய்யும் போதே சுவாதினயதையும் எடுத்துக்கொள்ளுமாறு வாய்மொழியாக சொன்னார்கள். ஒப்பந்த தேதியிலேயே சுவாதினத்தை வாய்மொழியாக ஒப்படைத்தாக சொல்வது தவறான தகவல் என்றாலும் மொதித கிரைய தொகையான ரூ.18,,90,000 தொகையில் 1,50,000 ரூபாய் ஒப்பந்த தேதியில் குறைந்த பணத்தை பெற்றுக்கொண்டு சுவாதினத்தை எவ்வாறு கொடுத்தார்கள் என்றால் தாவா சொத்தின் அருகிலேயே முதல் பிரதிவாதியிடம் இருந்து 40 சென்ட் வாங்கியிருந்தேன்.

அதனுடன் சேர்ந்து ஆவணத்தின் அடிப்படையில் 72 செண்ட் ஆகும்'. ஆனால் 67 செண்ட் உள்ளது. அதில் 40 செண்ட் ஏற்கனவே என்னிடம் தான்

உள்ளது. மீதம் உள்ள 27 சென்டையும் ஒப்பந்தம் செய்யும் அன்று சேர்த்து சுவாதினம் எடுத்துக்கொள்ளுமாறு முதல் பிரதிவாதி என்னிடம் சொன்னார்.

கிரைய ஒப்பந்தத்தில் வாய்மொழியாக சுவாதினம் எனக்கு ஒப்படைக்கப்படவில்லை என்றாலும், நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த காரணத்திற்காக சொத்து விற்கப்படுகிறதோ அதற்கான கால அவகாசம் ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட தேதியின் படி கிரைய பத்திரம் செய்து கொள்ள வேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். குறைந்தபட்சம் 1 மாத காலம் என்று குறிப்பிட்டிருந்தேன் அதன் பின்னர் 1ம் பிரதிவாதியிடம் காலநீட்டிப்பு கோரியிருந்தேன். எங்களுக்குள் ஏற்பட்ட ஒப்பந்த தேதியிலிருந்து எத்தனை நாட்கள் கழித்து முதல் பிரதிவாதி வேறோருவருக்கு பொது அதிகாரம் கொடுத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் சுமார் 1 வருடம் கழித்து தெரியவந்தது.

நான் இல்லாத நேரத்தில் அப்தல் காலித் என்பவர் 27 சென்டுடன் சேர்த்து எனது சொத்தான 40 சென்டிற்கும் சேர்த்து வேலி அடைத்து விட்டார். அப்போது அவரை சென்று கேட்டபோது காவல் நிலையத்தில் முதல் பிரதிவாதி அப்துல் காலித்துக்கு பொது அதிகாரம் கொடுத்தாக சொன்னார்கள். முதல் பிரதிவாதி பொது அதிகாரம் கொடுப்பதற்கு முன்பாகவே 2, 3 முறை பதிவு செய்வதற்காக முதல் பிரதிவாதியை அழைத்தேன். நான் மேற்சொன்ன விவரங்களை அனைத்தும் தவறு என்றாலும் முதல் பிரதிவாதி காலவரைசட்டத்தின் படி 4 வருடங்கள் கழித்து தான் பொது அதிகாரம் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. அவர் பொது அதிகாரம் கொடுத்த விவரத்தை எனக்கு சொல்லவில்லை. மேலும் வில்லங்கத்தை பார்த்து தான் அந்த விவரத்தை நான் தெரிந்து கொண்டேன்.

அவ்வாறு அந்த பத்திரத்தை பதிவு செய்வதற்கு முதல் பிரதிவாதியை அறிவிப்பு எதுவும் கொடுத்து அழைத்தேனா என்றால் எழுத்துபூர்வமாக எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை. வாய் மொழியாக தொலைபேசியிலும், நேரிலும் தான் அழைத்துள்ளேன். முதல் பிரதிவாதியின் கணவர் நோய்வாய்பட்டு இறந்தார்

என்றும், 10/12/2015 அன்று அவர் சிகிட்சை பலனில்லாமல் இறந்து விட்டார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அவர் நோய் வாய் பட்டதற்கும் எனது கிரைய ஒப்பந்தத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

21/01/2015 அன்று கிரைய ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த நிலையில் 1 மாத கால கெடுவுக்குள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் அதுவும் செய்ய தவறியுள்ள நிலையில் 23/03/2018 வரை தான் வழக்கு தாக்கல் செய்வதற்கான காலகெடு இருந்ததால் அதை தாண்டி 2019 ம் ஆண்டு தான் இந்த வழக்கு நான் தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. சர்வே எண். 12/2பி ல் 40 சென்டை 1ம் பிரதிவாதியிடம் இருந்து முதல் தவனையாக பெற்றேன் . 3 மாத கால அவகாசம் கேட்டிருந்தேன். அதுபோல தான் தாவா சொத்தான 27 சென்டிற்கும் அவர்களிடம் கால அவகாசம் கேட்டிருந்தேன்.

தாவா சொத்தின் மூலமாக ஏற்பட்ட கிரைய பத்திரத்திற்காக இறுதியாக எவ்வளவு 1ம் பிரதிவாதிக்க கொடுத்தேன் என்றல் சுமார் ரூ. 1, 50, 000 கொடுதேன். அது வங்கி ஆவணங்களை பார்த்தால் தான் சரியாக தெரியும். வங்கி மூலமாக தான் அந்த பணத்தை செலுத்தினேன். நான் 1ம் பிரதிவாதிக்கு முன்பணமாக கொடுத்தாக சொல்லப்படும் 4, 50,000 ரூபாயில் 1, 50,000 ரூபாய் ரொக்கமாக ஒப்பந்த தேதியிலும், நான் 1,00,000 ரூபாய் வங்கி காசோலையிலும் மட்டும் தான் கொடுத்துள்ளேன் என்றாலும மீதம் உள்ள 2,00,000 ரூபாய் குறித்து தவறாக விளக்கம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பந்த தேதி அன்று 1,36,000 ரூபாய் ரொக்கமாகவும், 14,000 ரூபாய் காசோலையாக கொடுத்தேன். ஒப்பந்த பத்திரத்தில் 1,50,000 ரூபாய் என்றும் மேலும் 14,000 ரூபாய் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், ஆனால் அந்த விவரத்தை எனது பிராதில் குறிப்பிடப்படவில்லை என்றால் அந்த 14,000 ரூபாயை சேர்த்து தான். 1, 50, 000 ரூபாய் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் மீதம் உள்ள 2,00,000 ரூபாக்கு, தலா 1,00,000 ரூபாயாக பெயர் நிரப்படாத காசோலைகளை 1ம் பிரதிவாதியிடம் கொடுத்திருந்தேன். அவர் அந்த காசோலைகளை தான் செலுத்துவதாகவும் அல்லது அவர் மகன்களிடம் கொடுத்து

செலுத்துவதாகவும் என்னிடம் சொல்லியிருந்தார். அவ்வாறு 1ம் பிரதிவாதியிடம் பெயர் நிரப்படாத காசோலைகளை கொடுத்ததாக சொல்வது தவறு என்றாலும் நான் ஏற்கனவே தெரிவித்தபடி முன்னதாக வாங்கிய 40 சென்டிற்கு மீத தொகையை தான் அந்த காசோலைகளாக கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

அந்த 40 சென்டிற்கு நான் செலுத்திய தொகைக்கு உண்டான ஆவணங்களை நான் ஏழுதி வைத்துள்ளேன். அதற்கு அவர்கள் பெற்றுக்கொண்டதற்காக ரசீதை நான் வைத்துள்ளேன். அதை என்னால் ஆவணமாக தாக்கல் செய்ய இயலும். இந்த தாவா சொத்திற்காக பணம் செலுத்தியிருந்தால் யார் பெயரில் ஒப்பந்தம் செய்துள்ளோமோ அவர்கப் பெயரில் த ன் பணம் செலுத்த வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், 1ம் பிரதிவாதி வங்கிக்கு செல்ல இயலாது என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவரது அறிவுறுத்தலின் பேரில் தான் அவ்வாறு காசோலைகளை கொடுத்தேன்.

எனது வழக்குரையில் நான் சுவாதினத்தில் உள்ள சொத்தில் தென்னை மற்றும் நிலக்கடலை பயிர் செய்வதாக சொல்லியுள்ள நிலையில் அதற்காக அடங்கல் அல்லது வருவாய் துறையில் இருந்து ஆவணங்கள் ஏதேனும் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. ஆனால் இதற்கு முன்பு நீதிமனற்ம் மூலம் வழக்கறிஞர் ஆணையராக நியமிக்கப்பட்டு அந்த இடம் அளக்கப்பட்டது. அதன் அடிப்டையில் நான் சுவாதினத்தில் உள்ளேன் என்று தெரிவிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் மரங்கள் இருப்பதாக உறுதி செய்யப்பட்ட போதிலும் அதை நான் தான் வைத்தேன் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சூனாம்பேடு காவல் நிலையத்தில் என் மீது புகார் கொடுக்கப்ட்டு நான் அந்த சுவாதினத்தில் உள்ளேன் என்றும் நான் அங்கு பயிர் செய்து வருகிறேன் என்று தான் புகார் கொடுக்கபட்டுள்ளது.

மேற்சொன்ன காரணம் தவறான காரணம் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி அப்துல் காலித் 25.02.2019 அன்று பணம் செலுத்தி சர்வேயரால் அளக்கப்பட்டு வேலி போடப்பட்டுள்ளது என்றால் நான் அனுபவத்தில் இருந்தபோது தான்

எனக்கு தெரியாமல் அங்கு இருந்த பயிர்களை சேதப்படுத்தி வேலி அமைத்ததார். ஒப்பந்த பத்திரத்தின் காலக்கெடு கடந்த பிறகும் 4 ஆண்டுகள் கால நீட்டிப்பு கொடுக்கப்ட்ட பிறகும் நான் பணம் செலுத்தாவிட்டால் ஒப்பந்த பத்திரம் காலாவதி ஆகி விடும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் ஒப்பந்த பத்திரத்தை பதிவு செய்ய அழைத்துக்கொண்டு தான் இருந்தேன். ஆனால் 1 ம் பிரதிவாதி என்னிடம் பேசிய தொகைக்கு மேல் வேறோருவரிடம் தொகை கிடைத்ததால் அவ்வாறு செய்து விட்டார். நான் அந்த ஒப்பந்தத்தை பதிவு செய்ய தயாராக இருந்தேன் என்பதை நிரூபிக்க அன்றைய தினம் தொகையை தயாராக வைத்திருந்தேன் என்று ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நம்பிக்கையின் அடிப்படையில் தான் அவர்களை அழைத்துக்கொண்டிருந்தேன்.

மேற்சொன்ன 27/02/2019 ம் தேதி சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் முன்னிலையில் 2 ம் பிரதிவாதி தாவா சொத்தை அளக்க முற்பட்ட போது நான் பிரச்சனை செய்தததால் சூனாம்பேடு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும் அவ்வாறு தவறாக புகார் கொடுத்திருந்தால் நான் அதை நீதிமன்றததில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் சி.எஸ். ஆரை தாக்கல் செய்துள்ளேன். அது தவறான தகவல் என்றால் சரியல்ல., நான் சி.எஸ்.ஆர் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் காவல் நிலையம் சென்று கேட்ட போது என் மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொல்லி சி.எஸ் ஆரை கொடுத்தார்கள். அதை நான் தாக்கல் செய்துள்ளேன்.

27/02/2019 அன்று 2ம் பிரதிவாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் சூனாம்பேடு காவல் டிநலையத்தில் என்னை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி தாவா சொத்திற்கு 2 ம் பிரதிவாதி பவர் பெற்றிருப்பதாகவும் அதனால் அங்கு நான் செல்லக்கூடாத என்று என்னை எச்சரித்து அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கை மதுராந்தகம் நீதிமனற்ததில் நான் எப்போது தாக்கல் செய்தேன் என்ற தேதி தெரியுமா என்றால் சரிவர நினைவு இல்லை.

1ம் பிரதிவாதி ஒப்பந்த பத்திரத்தின் படி 1மாத கால அவகாம் கொடுத்து அதன் பின்னர் 4 வருடம் கழித்து தான் 2-ம் பிரவிதிக்கு பொது அதிகாரம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு, 1 ம் பிரதிவாதி பொது அதிகாரம் கொடுப்பதற்கு முன்பாகவே எனக்கு அறிவிப்பு கொடுக்கப்ட்டது என்றாலும், அதில் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேலும் ஒப்பந்தம் செய்து 4 வருடம் கழித்து கால வரையறை முடிந்த பிறகும் எனக்கு அறிவிப்பு கொடுத்த பிறகுதான் வேறோரு நபருக்கு பவர் கொடுக்க வேண்டும் என்று அவசியம் இல்லை என்றாலும் அவர்களாகவே வேறோருவருக்கு விற்பனை செய்யலாம் என்றாலும் சரியல்ல. பொது அதிகாரத்தில் சான்றிட்ட நகலை பொது அதிகாரம் கொடுத்தவரை அல்லது பெற்றவரோ தான் பெற முடியும் நான் எவ்வாறு அதை பெற்று தாக்கல் செய்தேன் என்றால் வில்லங்கத்தில் ஆவணத்தின் எண் குறிப்பிடப்பட்டிருந்தது. அதை வைத்து சான்றிட்ட நகலை பெற்றேன். கால தாமதம் செய்தது என்றுடைய தவறு என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது)

(மறு விசாரணை இல்லை)

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

DM Cum JM
Cheyyur